# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 08 - நேரம்:30 நிமிடம்

## விடைப்பத்திரம் : முல்லையும் தேரும்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப
ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

<u>**வினாத்தொகுதி:01**</u>

**(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.**

- **திணை:** முல்லைத் திணை
- **துறை** : வினை முடிந்த தலைமகன் தலைவியை காணத் துடிக்கும் ஆர்வ மேலீட்டால் உள்ளமே எனக் தேர்பாகனுக்கு சொல்லியது:
    - = தலைவன் வினை நிமித்தம் தலைவியை பிரிந்து செல்ல நேர்ந்த போது வருந்திய தலைவிற்கு கார்காலம் வந்ததும் திரும்பி வருவேன் என ஆறுதல் கூறி பிரிந்தான். வினையும் முடிந்தது. கார்காலமும் வந்து தலைவியைக் காணும் வேட்கை மிகுந்த தலைவன் தன் பாகனிடம் கூறியது.
    - = தனது போர்த் தொழில் முடிந்து திரும்பும் தலைவன் கார்காலம் வந்துவிட்ட நிலையில் தலைவியிடம் செல்ல வேகமாகத் தேரினைச் செலுத்தும்படி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- ஊர்மதி - (விரைவாக) செலுத்துவாயாக
- புரிந்த - அன்பு / விருப்பம் கொண்ட
- திரி மருப்பு - முறுக்கிய கொம்பு
- பிணி அவிழ - கட்டு அவிழ

**(04 புள்ளிகள்)**

**(iii) முல்லைநிலத்துக் கார்காலம் பற்றிய வர்ணனைகள் இப்பாடலில் துலங்குமாற்றை எடுத்துக்காட்டுக.**

- மழை மிகுதியாக பொழிதல்
- முல்லை நிலத்தில் பசுமைப்பயன்கள் காணப்படல்
- பள்ளங்களில் நீர் நிரம்பிக் காணப்படல்
- நீர்ப்பள்ளங்களிலிருந்து தவளைகள் ஒலித்தல்
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடத்தல்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருத்தல்
- ஆண்மான் சுனைநீரை அருந்தி பெண் மானுடன் இன்புற்றிருத்தல்

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) பொதும்பிற் புல்லாளங்கண்ணியார் இப்பாடலைப் பாடிய சந்தர்ப்பத்தைக்குறிப்பிட்டு,பாடலின் பேசுபொருளை எடுத்துக்காட்டுக.**

- **சந்தர்ப்பம்:** முல்லை நிலத்தலைவன் வினை நிமித்தம் தலைவியை பிரிந்து செல்ல நேர்ந்த போது வருந்திய தலைவிற்கு கார்காலம் வந்ததும் திரும்பி வருவேன் என ஆறுதல் கூறி பிரிந்தான். வினையும் முடிந்தது. கார்காலமும் வந்து தலைவியைக் காணும் வேட்கை மிகுந்த தலைவன் தன் பாகனிடம் தேரை விரைந்து செலுத்திய சந்தர்ப்பத்தில் கூறியது.
- **பேசுபொருள்:** கார்காலத்தின் வரவால் தலைவியை காணத் துடிக்கும் தலைவனின் ஆர்வ உள்ளமே பேசப்படுகின்றது.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- நெடுநெறி - நீண்டவழி
- அணந்து - மேல் நிமிர்ந்து
- இரலை - ஆண்மான்
- படுமழை - பெருமழை

**(04 புள்ளிகள்)**

**(iii) கையாளப்பட்ட உவமையணிகள் இரண்டை எடுத்துக்காட்டுக.**

- தேரை சிறுபல்லியத்தின் கறங்க : நீர் நிறைந்த பள்ளங்களில் தவளைகளின் ஒலிகள் சிறியவையாகிய பல வாத்தியங்கள் ஒன்றிணைத்து ஒலிப்பது போல இருந்தன.
  = உவமானம் : சிறு பல்லியங்கள் ஒலித்தல்
  = உவமேயம் : தவளைகள் ஒலித்தல்
  = பொதுத்தன்மை : கூட்டமாக ஒலித்தல்

- வெஞ்சின் அரவின் பை அணந்தனை தன்கமழ் கேடல் தாது பிணி அவிழ் : மிக்க சினமுடைய பாம்புகள் படம் எடுப்பது போல காந்தன் மொட்டுக்கள் இதழ் விரிந்து காணப்பட்டன.
  = உவமானம் : வெஞ்சின அரவின் பை மேல்நோக்கி விளங்கல்
  = உவமேயம் : காந்தல் மலர் (கர்த்திகைப்பூ) மலர்ந்திருத்தல்
  = பொதுத்தன்மை : அழகிய தோற்றத்துடன் மேல் நோக்கி எழுந்து அசைந்தாடல்

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) இச்செய்யுள் உணர்த்த முற்படும் விடயத்தை இனங்கண்டு எழுதுக.**

- தலைவியை காணத் துடிக்கும் ஆர்வ உள்ளமே எனக் கூறப்படுகிறது.
- தனது போர்த் தொழில் முடிந்து திரும்பும் தலைவன் கார்காலம் வந்துவிட்ட நிலையில் தலைவியிடம் செல்ல வேகமாகத் தேரினைச் செலுத்தும்படி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- தெள்அறல் - தெளிந்த நீர்
- தண்பதம் - குளிர்ந்த பருவம்
- மா அரிவை - மாமை நிறத்தையுடைய பெண் (தலைவி)
- பல்லியம் - பல்வகையான இசைக்கருவிகள்

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடலில் வெளிப்படும் உள்ளுறை உவமம் இரண்டை எடுத்துக்காட்டுக.**

- திருகிய கொம்புகளையுடைய இரலைமான் தெளிந்த நீரைப்பருகி தான் விரும்பும் பெண் துணையோடு நிம்மதியாக மகிழ்ந்து வாழ்கிறது எனவே **நீ உன்னவளை தழுவ வேண்டும் நான் என்னவளை தழுவ வேண்டும்.**

- கார்காலம் தொடங்கியமையும் அக்காலத்தில் நிகழ்வனவும் **தலைவியிடம் தலைவன் திரும்ப வேண்டிய சந்தர்ப்பத்தினை** நினைவுறுத்துகின்றன.

- காட்டில் பெய்யும் கனமழையும் குளிர்ந்த நீரில் குதிகலித்து கத்தும் தவளைகளும் செம்மண்ணில் உதிர்ந்து கிடக்கும் பூக்களும் காற்றில் மிதக்கும் பூ மகரந்த வாசனைகளும் **தலைவியும் தன் வருகைக்காக காத்திருப்பாள்** என்பதனை உணர்த்துகின்றன.

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) பாடலில் வெளிப்படும் குதிரைகள் பற்றிய வர்ணனைகள் யாவை?**

- நீண்ட பெருவழியில் விரைவாக ஓடும் திறன் வாய்ந்தவை
- காலிலும், கழுத்திலும் சலங்கைகள் தொங்கும்படியாக ஒலி எழுப்பியவாறு ஓடுவன

**(04 புள்ளிகள்)**

**(ii) தலைவியை விரைந்து அடையவேண்டுமென்ற தலைவனின் ஆவல் எல்லாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?**

- ஆண் மானானது பெண் மானுடன் நீர் அருந்தி இன்புற்றிருத்தல் மூலம் தலைவனது மன நிலையில் தலைவியைக் காணும் ஆவல் வெளிப்படுத்தப்படுகிறது.
- நீர்ப்பள்ளங்களில் இருந்து தவளைகள் ஒலியெழுப்பி இன்புறுவது தலைவிடத்து விரைந்து செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வத்தை ஊட்டுகின்றன.
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் தோற்றம் தலைவியினது அழகையும் பிரிவுத்துயரத்தையும் நினைவுறுத்த தலைவியை அடைய வேண்டும் எனும் ஆர்வத்தால் உந்தப்படுகின்றான்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருப்பது தலைவியின் மென்மையான கையசைவு அழைப்பாக தலைவன் கணரணதவதனால் தலைவியிடத்து விரைந்து செல்ல வேண்டுமென்ற ஆவல் தொனிக்கிறது.
- விரைந்து சென்று தலைவியை காண்பதற்காக குதிரைகள் பூட்டியதேரை விரைவாக செலுத்துமாறு பாகனை தூண்டுவதிலிருந்தும் தலைவனது ஆவல் வெளிப்படுகிறது.

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலினூடாகப் புலப்படும் சங்க இலக்கியப் பண்புகள் நான்கைக்குறிப்பிடுக.**

- முல்லை நிலத்துக்குரிய இருத்தல் ஒழுக்கம் கூறப்படுதல்.
- வினை முடிந்த தலைமகன் தேர்பாகனுக்கு சொல்லிய துறையாக அமைவது.
- இயற்கை வர்ணனைகளை அதிகம் கொண்டிருத்தல்:தேரைகள் சத்தமிடுதல்,பிடவு மரத்தின் மலர்கள் உதிர்தல்,கார்த்திகைப் பூக்கள் மொட்டு விரிதல்,ஆண் மான்கள் நீரைக் குடித்துவிட்டு, பெண் மானோடு மகிழ்ச்சியுடன் தங்குதல்.
- முல்லை நில தேர்ப்பாகன்(வலவன்) கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்தது.
- தவளைகள், மான்கள்,பிடவம் கொடிகளின் மலர்கள்,காந்தல் மொட்டுக்கள்,சுனைநீர் நிலைகள் முதலிய கருப்பொருட்களை கொண்டிருப்பது.
- உள்ளுறை உவமை ஊடாகவும் கருத்ததை உணர்த்துதல்: திருகிய கொம்புகளையுடைய இரலைமான் தெளிந்த நீரைப்பருகி தான் விரும்பும் பெண் துணையோடு நிம்மதியாக வாழ்கிறது எனவே நீ உன்னவளை தழுவ வேண்டும் நான் என்னவளை தழுவ வேண்டும்.

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:05</u>

**(i) பாடலில் வெளிப்படும் தலைவியின் அழகு எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது எனக் கூறுக.**

- தலைவனிடத்து விருப்பமான கொள்கையுடையவர்
- அழகிய மாமை நிறத்தை உடையவர்

**(04 புள்ளிகள்)**

**(ii) கவிதையின் பாடுபொருள் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.**

- கார்காலம் வந்ததை தெரிவிக்கும் முல்லைநில காட்சிகளை அடுக்கியவாறு எடுத்துக்காட்டுவதன் மூலம்
- தன் உள்ளத்தில் தலைவியை சந்திக்க வேண்டுமென்ற ஆர்வ மேலீட்டை கூறுவதன் மூலம்
- பல்வேறு உள்ளுறை உவமையை மிக சூட்சுமமாக கூறுவதன் மூலம்
- சாதாரண உவமையணியினை கையாண்டு வெளிப்படுத்துவதன் மூலமும் எடுத்துரைக்கின்றார்.

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடலில் முல்லைநிலத்து கார்காலத்தின் வருகை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.**

- மலை மிகுதியாக பொழிதல்
- முல்லை நிலத்தில் பசுமைப்பயன்கள் காணப்படல்
- பள்ளங்களில் நீர் நிரம்பிக் காணப்படல்
- நீர்ப்பள்ளங்களிலிருந்து தவளைகள் ஒலித்தல்
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடத்தல்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருத்தல்
- ஆண்மான் சுனைநீரை அருந்தி பெண் மானுடன் இன்புற்றிருத்தல்

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:06</u>

**(i) முல்லைத்திணைக்குரிய கருப்பொருட்களாக பாடலில் குறிப்பிடப்படுபவை யாவை?**

- தவளைகள், மான்கள்
- பிடவம் கொடிகளின் மலர்கள்
- காந்தல் மொட்டுக்கள்
- சுனைநீர் நிலைகள்

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- புயம் - பயன்,நன்மை
- புறவு - முல்லை நிலம்
- கால் - பூவின் காம்பு மலர் (அலர்ந்தது)
- அயிர் - நுண்மணல்

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலிலுள்ள சிறப்புக்களதக நீர் இனங்கண்டவை யாவை?**

- கார்காலம் ஆரம்பமாகும் போது இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான வர்ணனைகள்(சங்ககாலப் பண்புகளில் ஒன்று இயற்கை வர்ணனைகளை அதிகம் கொண்டிருத்தல்)
    = தேரைகள் சத்தமிடுதல்
    = பிடவு மரத்தின் மலர்கள் உதிர்தல்.
    = கார்த்திகைப் பூக்கள் மொட்டு விரிதல்.
    = ஆண் மான்கள் நீரைக் குடித்துவிட்டு, பெண் மானோடு மகிழ்ச்சியுடன் தங்குதல். இவற்றால் முல்லை நிலமே அழகு பெறல்.

- குதிரைபற்றிய நுட்பமான வர்ணனைகள்ஓ டுபரி மெலியக் கொய்சுவல் புரவி (ஓடும் வேகம் குறையாத கொய்யப்பட்ட பிடரி மயிரினை உடைய குதிரை)

- உவமைஅணிகள்: “ தேரை சிறுபல்லியத்தின் நெடு நெறிக்கறங்க“ . தேரையின் ஒலிக்கு வாத்தியங்களின் ஒலி உவமையாகக் கூறப்பட்டுள்ளது. “ வெம்சின அரவின் பை அணந்து அன்ன தண்கமழ் கோடல் தாது பிணி அவிழ“மொட்டவிழ்ந்து மலர்ந்த காந்தள் மலர்களுக்கு பாம்பின் படம் உவமையாக்கிக் கூறப்பட்டுள்ளது.

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**